விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 185 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 07 வெள்ளிக்கிழமை (21.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தமிழ் மக்களின் இனப் பிரச்சினை விவகாரம்

# இலங்கை அரசுடன் பேசி வருகின்றோம்

### தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளிடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு



- 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தி தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தரப்பால் ஜெய்சங்கரிடம் கோரிக்கை.
- பொது வேட்பாளர் விவகாரத்தில் ஆர்வமாக இருக்கின்றீர்களா? தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பிய ஜெய்சங்கர். (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜெய்சங்கருடனான சந்திப்பில் பங்கேற்காத சம்பந்தன்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் திடீர் சுகவீனம் ▷15

## இலங்கை – இந்திய எரிசக்தித்துறை திட்டங்கள் குறித்து அவதானம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எரிசக்தித்துறை தொடர்பான கூட்டுத்திட்டங்களை துரிதப்படுத்துவது குறித்து ▷16

## மனைவியை எரித்துக் கொன்ற கணவனுக்கு மரண தண்டனை

### யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மனைவியை தீ மூட்டி எரித்து படுகொலை செய்த கணவனுக்கு யாழ். மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை வழக்கு தீர்ப்புக்காக திகதியிடப்பட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி மானிப்பாய் காக்கைதீவு பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசா ▷15

### நீதிமன்ற அனுமதியை மீறி

## முல்லை குருந்தூர்மலையில் பிக்குகளின் பாத யாத்திரை

### பொலிஸ், படையினர் பாதுகாப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியில் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் பிக்குகள் குழு பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி மகியங்கனையிலிருந்து பாத ▷15

## நெடுந்தீவில் இளைஞன் ஒருவர் படுகொலை

### சந்தேக நபர் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு ஏழாம் வட்டாரப் பகுதியில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு 07ம் வட்டாரத்தைச் சேர்ந்த சமக்கீன் தேவராஜ் ▷15

## 13ஆம் திருத்தச் சட்டத்தால் தமிழர்களுக்கு நன்மையில்லை

### ஜெய்சங்கரைச் சந்தித்த பின் விக்னேஸ்வரன்

(கொழும்பு)

13ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

"2009ஆம் ஆண் ▷15

## ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு கட்டாயம்

### தேர்தல்கள் ஆணைக்குழுப் பணிப்பாளர்

(கிளிநொச்சி)

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற பயிற்சி நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஒன்றை ▷15

## மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞன் மரணம்

### ஊர்காவற்றுறையில் சம்பவம்

(ஊர்காவற்றுறை)

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் ▷02

### யாழ்.ஆனைக்கோட்டையில்

## அகழ்வாராய்ச்சிப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் நிதிப் பங்களிப்புடன் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடன் அதன் தலைவர் யாழ். பல்கலைக் கழகவாழ்நாள் ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

## ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் மற்றும் தங்கம் ஒன்றிற்கு பின்வரும் ஊழியர்கள் தேவை

- Managers
- Cooks
- Supervisors
- Waiters
- Accountants
- Room Boys
- Office Assistants
- Cleaners
- Cashiers
- Delivery Boys

(C-651)

தொடர்புகளுக்கு:
076 151 7100, 021 499 3744


### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்
# ரவிச்சந்திரனின் மணிவிழா நாளை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் மணிவிழா நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் விழா நாயகனை அழைத்து வருதல், இசைச் சங்கமம், வாழ்த்துரைகள், மணிவிழா மலர் வெளியீடு, விழா நாயகனைக் கௌரவித்தல், ஏற்புரை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.(ம)

# 13ஐ நிறைவேற்றுவதாக கூறுபவர்களுக்கு வாக்களிக்காதீர்கள்
### சரத் பொன்சேகா

13ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதாகக்கூறுகின்ற அரசியல்வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தற்காலத்தில் மக்களை பிளவுபடுத்தி வாக்குகளைப் பெறுவதற்குப் பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் முயல்வதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ம-7,10)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகன் இராசாத்தி

திதி : சதுர்த்தசி (பௌர்ணமி)

காலனவனின் கையில் சிக்கி
ஓராண்டு கடந்தாலும் – அம்மா
காவியத்தலைவியாய் எம் இதயங்களில்
கணப்பொழுதும் வாழ்ந்து வருகின்றீர்கள் – அம்மா

எமது குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலிப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் 21.06.2024 இன்று வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

காளி கோவிலடி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்
077 555 8485(ரவி)

(101)



## கண்ணீர் அஞ்சலி

கிளி/பளை மத்திய கல்லூரியின் ஆசிரியரான
திருமதி. ஜெ. ஜெதுசா அவர்களின் பாசமிகு
மாமனாரான

அமரர்
கதிர்காமத்தம்பி கிருபாகரன்



அவர்கள் 19.06.2024 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை).

(1287)


## மோட்...

சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 21 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த 13ஆம் திகதி நாரந்தனையிலிருந்து ஊர்காவற்றுறை நோக்கி குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,10)


## மணப்பெண் தேவை

- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1991, விசாகம், Masters in Business Administration, Swiss மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1990, அனுசம், Quantity Surveyor, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1990, ரேவதி, P.hd, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவ குலம், 1985, பூசம், B.Sc (Hons) UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பண்டத்தரிப்பு, இந்து, கௌரவ குலம், 1985, பரணி, Receptionist, Germany Citizen divorce, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ஊர்காவற்றுறை, இந்து, கௌரவ குலம், 1986, MBBS Doctor UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி, இந்து, கௌரவ குலம், 1987, அத்தம் A/L, Business, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவ குலம், 1987, அச்சுவினி, It and Pharmacy Technician, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1988, அச்சுவினி IT Engineering Degree, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நயினாதீவு, இந்து, கௌரவ குலம், 1981, ரோகிணி M.Sc, Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1285)

S.Sharma J.P
Astrologer
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193



## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையிடம் 19.01.1955
ஆண்டவனிடம் 13.06.2022

அமரர் திருமதி
நற்குணராணி டானியல்

திதி : சதுர்த்தசி 21.06.2024

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் அழியாது உங்கள் திருவுருவம்
எம் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நம் கண்ணில் ஒளியாகி என்றும் இருப்பீர்கள் அம்மா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(0098)

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மகள் நிரஞ்சா, பேரன் துஷாந்




## பதவி வெற்றிடம்


- தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இரு பாலாரும்)
- உதவி ஆசிரியர் (இரு பாலாரும்)
- தகைமை:- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்
- பொருத்தமானவர்கள் (22.06.2024) நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்

மேலதிக தொடர்புகளுக்கு:- 076 097 3121

வலம்புரி இல. 191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் இரதோற்சவ பெருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# இலங்கை வந்தடைந்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புதிய அரசாங்கத்தின் கீழ் வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் முதலாவது இருதரப்பு விஜயம் இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இருதரப்பு பங்குடைமையின் பரந்தளவிலான விடயங்கள் குறித்துச் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார். (நி-6)

# இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா எப்போதும் உதவும்

(பீஜிங்)

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா எப்போதும் உதவுவதைப் போன்று கடன் விடயத்திலும் தொடர்ந்து ஆதரவளிக்கும் என சீன வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனத் தலைநகர் பீஜிங்கில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தநிலையில், ஊடகவியலாளர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது பேச்சாளர் சீனாவின் நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில், இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா உதவிகளை வழங்கி வருகிறது. அத்துடன் இலங்கையின் கடன் நிலைத்தன்மைக்கு ஆதரவளிக்க தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் தொடர்ந்து பணியாற்ற சீனா தயாராகவே உள்ளது என்றும் லின் ஜியான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## மரண அறிவித்தல்



### செல்வி மாலதி சிவராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அமுதசுரபி பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மாலதி சிவராசா அவர்கள் நேற்று 20.06.2024 வியாழக்கிழமை இறைதம் அடைந்தார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :*
குடும்பத்தினர்

(1288)


# மதுபான விற்பனை நிலைய உரிமம் வழங்குவதனை நிறுத்துமாறு கோரிக்கை


(கொழும்பு)

மதுபான விற்பனை நிலைய உரிமம் வழங்குவதனை நிறுத்துமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கான உரிமத்தை வழங்குவதனால் சமூக சீரழிவுகள் ஏற்படக் கூடும் என தெரிவித்துள்ளனர்.

இதனால் சமூக கிளர்ச்சிகள் ஏற்படுவதற்கு முன்னதாக அரசாங்கம் மதுபான விற்பனை நிலைய உரிமம் வழங்குவதனை நிறுத்திக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே சித்தார்

த்த சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடாதிபதி வராகொட ஞானரதன தேரர் ஆகியோரின் கையொப்பங்களுடன் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடு என்ற ரீதியில் எதிர் நோக்கியுள்ள பாரியளவான சமூக சீரழிவு நிலைமையாக மதுபானம் மற்றும் போதைப் பொருள் என்பனவற்றுக்கு அடிமையாவதனை குறிப்பிட முடியும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் சுயநலவாத பொருளாதார மற்றும் அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கம் மதுபான விற்பனை நிலைய உரிமங்களை வழங்குவதனை மாநாயக்க தேரர்கள் என்ற ரீதியில் எந்த வகையிலும் அனுமதிக்கப் போவதில்லை என தெரிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஹங்கேரியை வீழ்த்தி 'நாக்-அவுட்' சுற்றில் ஜேர்மனி



யூரோ" கிண்ண கால்பந்து லீக் போட்டியில் ஜேர்மனி அணி 2-0 என ஹங் கேரியை வீழ்த்தி யது.

ஜேர்மனியின் ஸ்டட்கர்ட் நக ரில் நேற்று முன் தினம் நடந்த "யூரோ" கிண்ண கால் பந்து "ஏ" பிரிவு லீக் போட்டி யில் உலகின் "நம்பர்-16" ஜேர் மனி அணி, 26 ஆவது இடத்தில் உள்ள ஹங்கேரி அணியை சந்தித்தது. ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் ஹவர்ட்ஸ் கோல் அடிக்க முயற்சித்த பந்தை ஹங்கேரி கோல்கீப்பர் பீட்டர் குலாசி தடுத்தார். பின் 22 ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் ஜமால் முசியாலா ஒரு கோல் அடித்தார். ஆட்டத்தின் 26 ஆவது நிமிடத்தில் ஹங்கேரியின் டொமினிக் சோபோஸ்லாயின் கோலடிக்கும் வாய்ப்பை ஜேர்மனி கோல்கீப்பர் மானுவல் நியூயர் சாமர்த்தியமாக தடுத்தார். முதல் பாதி முடிவில் ஜேர்மனி அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந் தது.


இரண்டாவது பாதியில் மீண்டும் அசத்திய ஜெர்மனி அணிக்கு 67வது நிமிடத்தில் இல்கே குண்டோகன் ஒரு கோல் அடித்தார். கடைசி நிமிடம் வரை போராடிய ஹங்கேரி அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் ஜேர்மனி அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. முதல் போட்டியில் ஸ்காட் லாந்தை வீழ்த்திய ஜேர்மனி அணி, தொடர்ச்சியாக 2 ஆவது வெற்றியை பதிவு செய்து, "ரவுண்டு-16" சுற் றுக்கான இடத்தை உறுதி செய் தது. (நி-6)

## 8 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து வெற்றி

சூப்பர்8 சுற்று போட்டியில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றுள்ளது.

ரி-20 உலகக் கிண்ண தொடரில் நேற்று காலை நடைபெற்ற சூப்பர் 8 சுற்று போட்டியில் இங்கிலாந்து மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் டொஸ் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது.




அதன்படி பட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு தொடக்க வீரர்களான பிரண்டன் கிங் 23 ரன்களும், சார்லஸ் 38 ரன்களும் எடுத்து அணிக்கு சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். பிரண்டன் கிங் காயம் காரணமாக பாதியில் வெளியேறி னார்.

இதையடுத்து களமிறங்கிய நிக் கோலஸ் பூரன், கப்டன் பவல் ஆகியோர் தலா 36 ரன்கள் எடுத் தனர். அதிரடி வீரர் ரசல் 1 ரன்னில் ஆட்டமிழந்தார். இறுதியில் ரூதர் போர்டு அதிரடி காட்ட வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 180 குவித்தது.

பிறகு 20 ஓவர்களில் 181 ரன்களை துரத்திய இங்கிலாந்து அணிக்கு தொடக்க வீரர் பில் சால்ட் அதிரடியாக ஆடி 47 பந்துகளில் 87 ரன்களை குவித்தார். இவருடன் களமிறங்கிய கப்டன் ஜாஸ் பட்லர் 25 ரன்களில் ஆட்டமிழந்தார். பிறகு வந்த மொயின் அலி 13 ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜானி பேர்ஸ்டோ 26 பந்துகளில் 48 ரன்களை விளா சினார். இதன் மூலம் இங்கிலாந்து அணி 17.3 ஓவர்களில் வெறும் 2 விக்கெட்டுகளை இழந்து 181 ரன்களை குவித்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (நி-6)

## இறுதிவரை போராடிய அமெரிக்கா தென்ஆபிரிக்கா அசத்தல்



அமெரிக்காவுக்கு எதிரான "சூப்பர்-8" போட்டியில் தென் ஆபிரிக்க அணி 18 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெஸ்ட் இண்டீசின் நார்த் சவுண்டில் நேற்று முன்தினம் நடந்த "ரி-20" உலக கோப்பை "சூப்பர்-8" போட்டியில் தென் ஆபிரிக்கா, அமெரிக்கா அணிகள் மோதின. "டொஸ்" வென்ற அமெரிக்க அணி "பீல்டிங்" தேர்வு செய்தது.

தென் ஆபிரிக்க அணிக்கு ரீசா ஹென்டிரிக்ஸ் (11) சோபிக்கவில்லை. இரண்டாவது விக்கெட்டுக்கு 110 ரன் சேர்த்த போது ஹர்மீத் சிங் பந்தில் குயின்டன் (74) அவுட்டானார். டேவிட் மில்லர் (0) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய மார்க்ரம் (46) கைகொடுத்தார்.

தென் ஆபிரிக்க அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 194 ரன் எடுத்தது. கிளாசன் (36), ஸ்டப்ஸ் (20) அவுட்டாகாமல் இருந்தனர்.

சவாலான இலக்கை விரட்டிய அமெரிக்க அணிக்கு ஸ்டீவன் டெய்லர் (24) நல்ல தொடக்கம் கொடுத்தார். நிதிஷ் குமார் (8), கப்டன் ஆரோன் ஜோன்ஸ் (0), கோரி ஆண்டர்சன் (12), ஷயான் ஜஹாங்கிர் (3) ஏமாற்றினர். அமெரிக்க அணி 5 விக்கெட்டுக்கு 76 ரன் எடுத்து திணறியது.

பின் இணைந்த ஆன்ட்ரிஸ் கவுஸ், ஹர்மீத் சிங் ஜோடி நம்பிக்கை தந்தது. நார்ட்ஜே வீசிய 15 ஆவது ஓவரில் வரிசையாக 2 சிக்சர் விளாசிய கவுஸ், 33 பந்தில் அரைசதம் கடந்தார். ஆறாவது விக்கெட்டுக்கு 91 ரன் சேர்த்த போது ரபாடா "வேகத்தில்" ஹர்மீத் (38) வெளியேறினார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 26 ரன் தேவைப்பட்டன. நார்ட்ஜே பந்துவீசினார். இந்த ஓவரில் 7 ரன் மட்டும் கிடைத்தது.

அமெரிக்க அணி 20 ஓவரில் 6 விக்கெட் டுக்கு 176 ரன் எடுத்து தோல்வியடைந்தது. கவுஸ் (80), ஜாஸ்தீப் சிங் (2) அவுட்டாகாமல் இருந்தனர். தென் ஆபிரிக்கா சார்பில் ரபாடா 3 விக்கெட் சாய்த்தார். இத்தொடரில் தென் ஆபிரிக்க அணி தொடர்ச்சியாக 5 ஆவது வெற்றியை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது பல அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருந்தனர். (படங்கள்:சிவசாந்தன்)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

(சி-649)


## வவுனியாவில் ரூ.20 லட்சம் பெறுமதியான மரங்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் விற்பனைக்காக சட்டவிரோதமாக வெட்டப்பட்டு வைத்திருந்த 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான மரங்கள் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜய சேகரவிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேராவின் உத்தரவின் பேரில், மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர், நேற்று முன்னெடுத்த விசேட சோதனையின் போது குறித்த மரங்களை மீட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த அப்பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்தனர்.


மீட்கப்பட்ட மரங்கள் சுமார் 20 இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியானவையாகும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீட்கப்பட்ட மரங்களையும் சந்தேக நபரையும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(நி-6-250)

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 10 – 03 – 1956

விண்ணில் 18 – 06 – 2024



## அமரர்.திரு. வைத்திலிங்கம் கைலைநாதன்

வாழ்க்கையில் பிறப்பு என்பது ஒருமுறை மட்டுமே! ஒருமுறை பிறந்து ஓராயிரம் முறை நினைக்க வைத்த எமது யாழ் மாவட்ட ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலரும் கூட்டுறவாளரும் தன்னலமற்ற வரலாற்றுச் சாதனை சேவைகள் என இலங்கை முழுவதும் தனது வலிமையான கால்களால் துவிச்சக்கரவண்டி மூலம் கூட்டுறவின் மகத்துவத்தை நிலை நாட்டிய அமரர் திரு.வை.கைலைநாதன் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

கூட்டுறவு என்றால் அது நாட்டுயர்வே! என்றும் கூட்டுறவிலே நெடுநாள் பயணித்து பழைமைகள் எல்லாம் எமக்கு புதுமையாக புகுவித்த வித்தகனே!

சர்வதேச கூட்டுறவு தினத்திலே எமக்கெல்லாம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் இலங்கையின் கரையோரங்கள் வரை துவிச்சக்கரவண்டியில் சென்று வந்த சாதனையாளரே! விளையாட்டில் வீரனாகவும் கூட்டுறவில் ஆசானாகவும் கூட்டுறவை வளர்த்த பெருந்தகையே!

தங்களின் பிரிவுச் செய்தி கேட்டு மனமுடைந்து நிற்கின்றோம் ஐயா.

ஏற்கவில்லை மனது, தாங்கவில்லை நெஞ்சம் காலத்தின் நியதி அது. பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு. அதற்கிணங்க அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்கள், கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-646)

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜனனி செந்தில்குமரன் அவர்களின்
அன்பு மாமனாரும் திருநெல்வேலி
றோ.க.த.க பாடசாலை அதிபர்
சி.செந்தில்குமரன் அவர்களின் தந்தையுமான

## முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம்

அவர்கள் 19.06.2024 அன்று காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(சி-648)

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
அதிபர், ஆசிரியர்கள், யா/பரமேஸ்வரா வித்தியாலயம் திருநெல்வேலி.

# இராசிபலன்

21.06.2024
ஆனி 07, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 7.40 மணிவரை
கேட்டை முன்னிரவு 6.55 மணிவரை

சுபநேரம் 5.54-7.24 மணி வரை
இராகுகாலம் 10.24-11.54 மணிவரை
பூரணை விரதம், உலக யோகா தினம்

சந்திராஷ்டமம்-அச்சுவினி, பரணி

வளவன்

**மேஷம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், இலாபகரமான நாள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**ரிஷபம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**சிம்மம்** பெற்றோர் மீதான பாசம் கூடும், திருமண முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் கூடும் நாள்.

**கும்பம்** என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உற்சாகமான நாள்.

**மிதுனம்** கனவுப் பலிதமுண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கடனில் ஒரு பகுதியைக் கொடுத்து தீர்க்கும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**கன்னி** எடுத்த காரியங்களை நிறைவேற்ற உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மீனம்** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான நேரத்தில் நன்றி சொல்லக் கற்றுக்கொள், அதுவே பேரின்பம்.

# மின்கட்டணம் குறைக்கப்பட்டால் மின்சார சபையை நடத்துவது கடினம்

## மின்சார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தலை இலக்காகக் கொண்டு பாரியளவிலான மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டால், மின்சார சபையை தொடர்வது கடினமாகும் என மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றாலும் தேவையில்லாமல் குறைக்கக் கூடாது.

தேசிய நூலக சேவைகள் மற்றும் ஆவணப்படுத்தல் சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆறு மாதங்களில் மின்சார வாரியம் ஓரளவு இலாபம் ஈட்டினால், அடுத்த ஆறு மாதங்களுக்கும் நுகர்வோர் பலனைப் பெற வேண்டும் என்றும், வாரியத்தின் தற்போதைய நிலை இலாபம் ஈட்டும் அமைப்பல்ல எனத் தெரிவித்தார்.

மேலும் அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இது குறித்து சிந்தித்து சரியானதைச் செய்யும் என நம்புகிறோம் எனத் தெரிவித்திருந்தார். (நி-6)


## ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வானது கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அதற்கு உள்ளடங்கலான தீர்வுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகளுடன் முன்னோக்கி செல்லுதல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் வடக்கு மாகண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீஷன், யாழ் மாவட்ட உதவி செயலாளர் செல்வி.உ.தர்சினி, பிரதேச செயலர்கள், பல்துறைசார் அரச உயர் அலுவலர்கள், கிறிசலிஸ் நிறுவன சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், பால்நிலை கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்ட உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள், ஒன்றியத்தின் உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(நி-6-30)




அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாகுட்டியின் 16 ஆவது ஆண்டு ஆனி மாத விசாக குருபூசை தினம் நேற்று முன்தினம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில் இராமசூரிய பிரபாகர குருக்கள், மாதகல் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய இரத்தின ஐயர் மாணிக்க வாசகக் குருக்கள் ஆகியோர் மூத்த சிவாச்சாரியார்களாக கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்: சிவசாந்தன்)

## காட்டு யானைகளால் நெற்பயிர்கள் சேதம்



(தரும்புரம்)

கிளிநொச்சி மகிழங்காடு கமக்காரர் அமைப்புக்குட்பட்ட பகுதிகளுக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் விவசாயிகளின் பல ஏக்கர் வயல் நிலங்களை சேதப்படுத்தியுள்ளது.

விதைத்து ஒன்றரை மாதங்களே ஆன நெற்பயிர்களையே யானைகள் அழித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். தொடர்ச்சியாக காட்டு யானைகளால் தமது நெல் வயல்கள் அழிவடைவதாகவும் இது தொடர்பில் உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமக்கு யானை வேலி அமைத்து தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)



யாழ்.நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம் பெற்றது. இதன் போது அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டிருந்தனர்.




## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2024.07.15-2024.12.31
## காலப்பகுதிக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட ஆட்டிறைச்சிக்கடை இல 01 ஐ 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் பதினைந்தாம் திகதி தொடக்கம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றினை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 21.06.2024-04.07.2022 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30-பி.ப 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
    கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 05.07.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.30
    கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 05.07.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணி
02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு தனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 05.07.2024 பிற்பகல் 02.30 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்விகோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும்.
08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2024 ஆம் ஆண்டு யூலை 15 ஆம் திகதி தொடக்கம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆட்டிறைச்சிக்கடைக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் (15.07.2024-31.12.2024) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதரவரிகள் தவிர மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை இல: 01 | ரூ.211,000.00 | ரூ.2,200.00 | ரூ.2,000.00 |

குறிப்பு - இந் நகராட்சி மன்றத்தின் இறைச்சிக்கடையிலிருந்து 1/2 Km சுற்றுவட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி, விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி**

(நி-650)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்லைனில் கடவுச்சீட்டு வழங்குவதில் சிக்கல்

(கொழும்பு)

ஒன்லைன் முறையின் மூலம் கடவுச்சீட்டுகளை வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரிகள் சரியான தரவுகளை சமர் ப்பிக்காத காரணத்தினால், இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்லைனில் கடவுச்சீட்டு பெறும் போது, விண்ணப்பத்தை பூர்த்தி செய் பவர்கள் சரியான தகவல்களை உள்ளிடாததால், பிரச்சினைகள் எழுந்துள்ளன.

சிலர் பயன்பாட்டில் இல்லாத தொலைபேசி இலக்கங்களை உள்ளீடு செய்துள்ளனர். இதன் காரணமாக அவர்களைத் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடவுச் சீட்டு வழங்குவதில் தாமதம் ஏற்படலாம் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# ஜப்பானில் வேகமெடுக்கும் அரிய வகை பக்ரீறியா

## இலங்கைக்கும் பாதிப்பா?

(கொழும்பு)

ஜப்பானில் பரவிவரும் அரிய பக்ரீறியாத் தொற்று தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

ஜப்பானில் ஒரு பக்ரீறியா துரிதமாக பரவி வருகின்றது எனவும் அதன் ஆபத்து இலங்கைக்கும் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அது தொடர்பில் இலங்கையில் சுகாதார அமைச்சு தயார் நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார். ஜப்பானில் பரவி வரும் அரிய பக்ரீறியா தொற்று உலக நெருக்கடியாக மாறும் என்று உலக சுகாதார அமைப்பினால் இன்னும் இனம் காணப்படவில்லை.

அத்துடன் அந்த வைரஸ் கட்டுப்படுத்தக் கூடிய ஒன்று என்பதால் அந்தந்தநாடுகள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகின்றன.

இலங்கையில் அது தொடர்பாக சுகாதார அமைச்சு கவனம் செலுத்துவதாகவும், விமான நிலையம் உள்ளிட்ட எல்லா நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் கொரோனா பெரும் தொற்று அளவுக்கு ஒரு உலகநெருக்கடியாக அந்த நாட்டில் கட்டுப்படுத்தக் கூடிய ஒருநிலைமையாக மாறும். அவ் வாறான நிலைமைகளில் சுகாதார பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட எல்லோரும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனவும் சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல பதிலளித்தார். (நி-6)

# 24 மணி நேரத்தில் 161 பேருக்கு டெங்கு

(கொழும்பு)

நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 161 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த 20 நாட்களில் 2,044 டெங்குநோயாளர்கள் பதிவாகி யுள்ளனர். இதேவேளை, மே மாதத்தில் 2,647 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 26,964 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இவ் வருடத்தில் டெங்கு நோயினால் 9 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:QS(Pvt)<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் தொழில்<br>தொ.இ: B/8991 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 17<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/12941 |
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:16 1/2<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:A/L,களஞ்சியப் பொறுப்பாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு- நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/13939 | பிறப்பு-1989-இந்து<br>நட்சத்திரம்-பரணி சூரிசெவ்11இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:சித்தமருத்துவர்<br>விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/13259 |
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம்:அனுஷம்<br>கி.பா:6 3/4<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:QS(Pvt), விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/14522 | பிறப்பு-1983-இந்து<br>நட்சத திரம்:அவிட்டம் சூரிசெவ்8இல்<br>கி.பா:37 3/4<br>உயரம் :5'2"<br>தகைமை/தொழில்: Teacher, விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு:படித்த மணமகன்<br>தொ.இ: G/13692 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# உணவுகள், மருந்துகள் கழுதைப் பாலில் தயாரிப்பு

## இலங்கையில் புதுமுயற்சி

(கொழும்பு)

கழுதைப்பாலில் இருந்து சீஸ் உள்ளிட்ட சத்தான உணவு மற்றும் தோல் நோய்களுக்கான மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை கண்டறியும் ஆய்வுகளை இலங்கை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனைப்பல்கலைக் கழகத்தின் கால் நடை மருத்துவபீடம், விஞ்ஞான பீடம் மற்றும் மருத்துவ பீடம் என்பன இணைந்து இந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

கழுதைப் பாலை அடிப்படையாகக் கொண்டு வாதநோய்களை தடுக்கும் தைலங்களை தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை மருத்துவ பீடத்தை தொடர்பு கொண்டு ஆராய திட்டமிட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பேராசிரியர் கலா நிதி அசோக தங்கொல்ல ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (நி-6)

# மரங்கள் வெட்டப்படுவதை தடுக்க ட்ரோன் மூலம் கண்காணிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வன அமைப்பில் சட்டவிரோத மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்காக "ட்ரோன்" தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என வன பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

"ட்ரோன்" தொழில்நுட்ப கண்காணிப்பு மூலம் பெறப்படும் தரவுகள் மூலம் அடையாளம் காணப்படுபவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கங்கா தரணியில் தீர்த்தமாடுவோம் தொழுது திருமுறை, அபிராமி அந்தாதி ஓதி வழிபடுவோம்

**வானோர் அடையாப் பேறு பெறுவோம்**

**திங்கட் பகவின் மணம்நாறும்**
**சீறடி சென்னிவைக்க**
**எங்கட்கு ஒருதவம் எய்தியவா!**
**எண்ணிறந்த விண்ணோர்**
**தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ!**
**தரங்கக்கடலுள்**
**வெங்கட் பணியணை மேல் துயில்**
**கூரும் விழுப்பொருளே.**
*அபிராமி அந்தாதி -35*

இந்த விழாக் காலம் வழிபடும் அடியார்கள் எல்லார்க்கும் (சாம்பவிதீர்க்கை) தீக்கை காலமாதலினாலும், இக் காலத்தில் இறைவன் தம்பம், விம்பம், கும்பமாகிய மூன்றிடத்திலும் வெளிப்பட்டு அருள் செய்தலினாலும், இவ் விழாவை மெய்யன்போடு தரிசிப்பவர், திருவருளையும் பெற்றுச் சிவ விளக்கமடைவார் என்பதற்கு ஐயுறவு இல்லை. **ஓம் நமசிவாய தாயே!** மெய்யன்போடு வழிபட்டுத் தரிசித்து, தீர்த்தத் திருவிழாத் தனக்கு ஒப்பொன்றில்லாத பேரின்பக் கடலினுள்ளே, பக்குவமடைந்த உயிரினை இறைவன் சேர்த்து, அவ் வின்பத்தை நுகருமாறு அழுத்தி நிற்கும் **ஓம் நமசிவாய தாயே!** தீர்த்தத் திருவிழா வீடு பேற்றை அவாவி நிற்கும் உயிருக்கு, இறைவன் பேரின்ப வாழ்வை அருளுவதைக் குறிப்பது.

ஓம் நமசிவாய தாயே!

35 ஆவது அபிராமி அந்தாதியில் இறுதி வரியில் **"தரங்கக் கடலுள் வெங்கட் பணியணையில் துயில் கூரும் விழுப்பொருளே!"**

தேவி சிவனை மஞ்சமாகக் கொண்டு எழுந்திருக்கிறாள். அதாவது சிவன் மீது சாய்ந்து சயனிக்கிறாள். அப்போது சிவபெருமான்.

அணிந்துள்ள வெங்கட் பணிகள்,அதாவது பாம்புகள் தேவிக்குத் தலையணையாக இதுவே தரங்கக் கடலுள் **"வெங்கட் பணியணைமேல் துயில்"** ஆழ்ந்திருக்கும் அன்னை தாயே!

பிறை நிலவின் மணம் [illegible] நின் திருவடிகளை, எங்கள் சிரத்தின் மேல், எங்களுக்கு கிடைத்த வாய்க்கப் பெற்ற பாக்கியம் **ஓம் நமசிவாய தாயே.** இந்தத் தவமும், அதன் பயனும் பெரிதும் மண்ணுலகிலேயே கிடைப்பவை என அடியார் எய்தும் தவப்பயன் என அபிராமிப்பட்டர் பெருமிதத்தில் வியந்தார்.

நாம் எல்லோரும் அபிராமி அந்தாதி ஓதி **"நாமும் நலம் பெறுவோம்" ஓம் நமசிவாய தாயே அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணித் தாயே!"**

புண்ணிய பயனைத்திருவிழாக் காலங்களின் நிறைவு நாளாகிய இன்று கங்காதரணியில் தீர்த்தத்தில் மூழ்கித் தொழுது திருமுறைகள், அபிராமி அந்தாதி, கந்தர் அந்தாதி, திருப்புகழ் ஓதி அருள் மிகு ஸ்ரீ நாகபூசணி அம்மன் பொற்பாதம் திருவடிகளைத் தியானித்து நற்கதி பெறுவோம். ஓம் தேவி நாகபூஷணித்தாயே.



**க.கு.க சிவபாலன்** (சி-647)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வெப்ப அலையால் வட இந்தியாவில் இதுவரை 110 பேர் உயிரிழப்பு

(டில்லி)


வெப்ப அலையின் தாக்கத்தினால் வட இந்தியாவில் 110 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சமீபகாலமாக கடும் வெப்ப அலைவீசி வருகின்றது.

குறிப்பாக கடந்த மார்ச் 1ஆம் திகதி முதல் ஜூன் 18 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில், இந்தியாவில் வெப்ப அலையின் தாக்கத்தால் உடலில் நீர்ச்சத்து குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு 110 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக உத்தரப்பிரதேசத்தில் 36 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.இதனைத் தொடர்ந்து பீகார், ராஜஸ்தான் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெப்ப பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.மேலும் இரவு நேரங்களிலும் வெப்பக் காற்று வீசி வருவதால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-6)

## ஒருவருக்கொருவர் உதவியாயிருப்போம் ரஷ்யா- வடகொரியா ஒப்பந்தம்



(பியாங்யாங்)

ரஷ்யாவும் வடகொரியாவும் பரஸ்பரம். ஒருநாடு தாக்கப்பட்டால் மற்றைய நாடு உடனடி இராணுவ உதவியை உடனடியாக வழங்குவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் வடகொரிய விஜயத்தின்போது இரு நாடுகளின் தலைவர்களும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இரண்டு நாடுகளிற்கும் இடையில் கடந்த பல வருடங்களாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் இதுவே மிக முக்கியமானது என சர்வதேச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் இந்த உடன்படிக்கை பனிப்போர் காலத்தின் 1961 ஆம் ஆண்டு பரஸ்பர பாதுகாப்பு உறுதிமொழிக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சி எனவும் அது தெரிவித்துள்ளது.

மேலும் இந்த உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டுள்ள நாட்டுடன் வடகொரிய ஜனாதிபதியின் உறவுகளை வலுப்படுத்தியுள்ளது.

இரண்டு நாடுகளில் ஒரு நாடு இராணுவரீதியான நடவடிக்கையை எதிர்கொண்டால் மற்றைய நாடு உடனடியாக இராணுவ உதவியையும் ஏனைய உதவிகளையும் வழங்க வேண்டும் என உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)



பிரதம...

தீவிரம...

(ஜெருசலேம்) —

பிரதமர் பெஞ்ச...

அரசுக்கு எதிர்ப்பு...

திகதியில் இருந்து...



## பயங்கர காட்டுத் தீயால் மெக்சிகோவில் அவசரநிலை அறிவிப்பு

### 1400 கட்டடங்கள் நாசம்:2 பேர் பலி



(மெக்சிக்கோ)

நியூமெக்ஸிகோவில் வேகமாக நகரும் இரண்டு காட்டுத்தீயால் 1,400 இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் நாசமாகியுள்ளதுடன் இருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர்.

ரூய்டோசோவின் மலைப் பகுதியில் ஏற்பட்ட தீயால் 8,000 குடியிருப்பாளர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். அது மட்டுமின்றி ரூய்டொசோவின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் 23,000 ஏக்கருக்கு மேல் தீயால் கருகியுள்ளது.

தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர்.

நியூமெக்சிகோவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால் ஆயிரக் கணக்கானோர் வெளியேறியதால் மாநில ஆளுநர் அவசர நிலையை அறிவித்துள்ளார். (நி-6)

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் கடலுக்குள் மூழ்கியது சரக்குக் கப்பல்

செங்கடல் வழியாகச் சென்ற லைபீரியா கொடியேற்றப்பட்ட, கிரீஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சரக்குக் கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் அந்தக் கப்பல் கடலுக்குள் மூழ்கியதோடு, குறித்த கப்பலின் மாலுமி உயிரிழந்துள்ளார் என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானிய இராணுவத்தின் கடல் வர்த்தகக் கண்காணிப்புப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லைபீரியா கொடியேற்றப்பட்ட, கிரீஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.வி. டியூட்டர் என்ற கப்பல் மீதே ஹவுதி கிளர்ச்சி யாளர்களால் தாக்குதல் மேற்கொள்ள ப்பட்டுள்ளது.

தாக்குதலில் குறித்த கப்பல் பலத்த சேதமடைந்த நிலையில், கடலில் மூழ்கியுள்ளதாகவும், கப்பலின் மாலுமி இதனால் உயிரிழந்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கப்பலில் இருந்த ஏனையவர்களை அமெரிக்காவின் யு.எஸ். எஸ். பிலிப்பின் சீ போர்க் கப்பல் மீட்டுள்ளதாகவும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

கப்பல் மூழ்கிய பகுதியில் அதன் உடைந்த பாகங்களும் எண்ணெயும் மிதப்பதை பிரித்தானிய கடற்படை கண்டறிந்தது.

ஹவுதி கிளர்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக கடலுக்குள் மூழ்கிய இரண்டாவது சரக்குக் கப்பல் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா- இஸ்ரேல் மோதலில் இஸ்ரேலுக்கு எதிராக செயற்படும் ஈரானின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள், இஸ்ரேல் நாட்டுடன் தொடர்புடைய சரக்குக் கப்பல்க... மீது மட்டுமே தாக்குத... நடத்துவதாகக் கூறினாலும்... அனைத்துக் கப்பல்களு... தற்போது குறிவைக்கப்ப... வதாகக் குற்றஞ்சாட்டப்ப... கிறது.

இதனால், உலகின் மு... கியத்துவம் வாய்ந்த வர்... தக வழித்தடங்களில் ஒ... றான செங்கடல் பகுதியி... சரக்கு கப்பல் போக்குவரத்... கடுமையாகப் பாதிக்கப்... ட்டுள்ளது.

இதனால், ஹவுதிகளி... தாக்குதல் திறனைக் குறை... பதற்காக அவர்கள் கட்டு... பாட்டில் உள்ள யேம... பகுதிகளில் அமெரிக்காவு... பிரித்தானியாவும் அவ்வ... போது தாக்குதல்களையு... நடத்தி வருகின்றமை குறி... பிடத்தக்கது. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மர் நெதன்யாகுவுக்கு எதிராக ...மடைந்து வரும் போராட்டம்

...ம்)

...ஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் ...ர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு மக்கள் கடந்த 17ஆம் ...நந்து தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.






இதன்போது பணயக் கைதிகளை விடுதலை செய்யுமாறும், தேர்தலை விரைவாக நடத்துமாறும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இப்போராட்டத்தின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வெடித்த வன்முறையில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வன்முறையில் 9 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரைக் காரணம் காட்டி பொதுத் தேர்தலை 2026 ஆம் ஆண்டு நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளமை அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ...தல் ...பல்

...கப்பல்கள் ...தாக்குதல் ...றினாலும், ...பல்களும் ...வக்கப்படு ...சாட்டப்படு

...கின் முக் ...ந்த வர்த் ...ளில் ஒன் ... பகுதியில் ...க்குவரத்து ...ாதிக்கப்ப

...வுதிகளின் ...க் குறைப் ...ள் கட்டுப் ... யேமன் ...ரிக்காவும் ... அவ்வப் ...களையும் ...மை குறிப் (நி-6)



## ஈரானின் புரட்சி இராணுவத்திற்குத் தடை விதித்த கனடா

(ஒட்டாவா)

ஈரானின் மிகவும் சக்தி வாய்ந்த இராணுவப் பிரிவான "ஈரானிய புரட்சி இராணுவத்தை" பயங்கரவாத குழுவாக அறிவிக்க கனடா தீர்மானித்துள்ளது.

கனேடிய எதிர்க்கட்சி கொடுத்துவரும் அழுத்தம் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக கனேடிய பிரஜைகள் மற்றும் இராஜதந்திரிகளை ஈரானில் இருந்து கனடாவுக்கு மீள அழைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈரானிய புரட்சிகர இராணுவம் ஈரானின் இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் பெரிதும் தலையிடுவதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சைப்பிரசை தளமாக இஸ்ரேல் பயன்படுத்தினால் சைப்பிரசை தாக்குவோம்- ஹிஸ்புல்லா எச்சரிக்கை

(ஜெருசலேம்)

ஹிஸ்புல்லா அமைப்பிற்கு எதிரான தாக்குதலிற்கு சைப்பிரசினை இஸ்ரேல் தளமாக பயன்படுத்தினால் சைப்பிரஸை இலக்குவைப்போம் என ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் சையத் ஹசன் நஸ்ரெல்ல எச்சரித்துள்ளார்.



லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை மேற்கொள்வதற்கு சைப்பிரசின் விமானநிலையங்களையும் தளங்களையும் பயன்படுத்துவதற்கு சைப்பிரஸ் அனுமதித்தால் சைப்பிரஸ் அரசாங்கம் அந்த யுத்தத்தின் ஒரு பகுதி என்பதே அர்த்தம் என ஹிஸ்புல்லா தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தனது அமைப்பு சைப்பிரசினை யுத்தத்தின் ஒரு பகுதியாகவே கையாளும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பிற்கு எதிராக பரந்துபட்ட தாக்குதலை மேற்கொள்வது குறித்து இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் உட்பட முக்கிய அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ள நிலையிலேயே ஹிஸ்புல்லா தலைவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

காசா போரில் ஹமாசிற்கு ஆதரவளிப்பதே ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய நோக்கம் என குறிப்பிட்டுள்ள அவர் இஸ்ரேலிய படையினரை ஒரு பகுதியில் முடக்கிவைத்திருப்பதில் வெற்றியடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## அமெரிக்கர்களை மணந்த அகதிகளுக்கு நிரந்தர குடியுரிமை- ஜோ பைடன்


(வோஷிங்டன்)

அமெரிக்கர்களை மணந்த அகதிகளுக்கு நிரந்தர குடியுரிமை அளிக்கப்படும் என அந்நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் உரிய ஆவணங்கள் இல்லாமல் நாட்டில் தங்கியிருப்பவர்கள், அமெரிக்கர்களின் கணவர் அல்லது மனைவியாக இருந்தால் அவர்கள் நிரந்தர குடியுரிமை கோரி விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு விண்ணப்பிப்பவர்கள் அமெரிக்காவில் குறைந்தது 10 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் ஜுன் 17ஆம் திகதிக்குப் பின்னர் அமெரிக்கர்களை மணந்த யாரும் இதற்காக விண்ணப்பிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் உரிய ஆவணங்கள் இல்லாமல் வசிக்கும் சுமார் 5 லட்சம் பேருக்கு நிரந்தர குடியேற்ற உரிமையும் பின்னர் குடியுரிமையும் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மத்தியில் அதிகரிக்கும் எலிக்காய்ச்சல்

## எச்சரிக்கும் சுகாதார தரப்பு

(கொழும்பு)

பொதுவாக எலிக் காய்ச்சல் என குறிப்பிடப்படும் லெப் டோஸ் பிரோசிஸ் நோயால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை இலங்கையின் சுகாதார அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

தொற்றுநோயியல் பிரிவின் ஆலோசகர் மருத்துவ கலாநிதி துசானி டபரேரா இது தொடர்பில் தகவல்களை பகிர்ந்துள்ளார்.

நெற் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு மற்றும் சுரங்கம் தோண்டுதல் போன்ற அதிக ஆபத்துள்ள தொழில்களில் ஈடுபடும் ஆண்கள் மத்தியி லேயே இந்த நோயின் தாக்கம் முன்பு இருந்து'வந்தது

எனினும் பல ஆண்டுகளாக, பெண்கள் லெப்டோஸ் பிரோசிஸ் நோயால் பாதிக்கப்படும் நிலை உருவாகி வருகிறது.

அந்தவகையில் கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 9,000 நோய்த்தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் இதுவரை 5,000 தொற்றுக்கள் பதிவாகியுள்ளன.

இந்த தொற்றுக்களில் பெரும்பாலானவை இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்களில் கண்டறியப்பட்டுள்ளன.

லெப்டோஸ்பிரோசிஸ் என்பது பாதிக்கப்பட்ட விலங்குகளின், குறிப்பாக கொறித்துண்ணிகளின் சிறு நீரால் மாசுபட்ட தண்ணீரின் மூலம் பரவும் ஒரு பக்டீரியா தொற்று ஆகும்.

இந்நிலையில், கடுமையான மழையைத் தொடர்ந்து தொற்றுநோய்களின் அபாயம் அதிகரிக்கிறது.

இந்த நோய் தசை வலி, மஞ்சள் காமாலை, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படுகிறது.

இறுதியாக, கடுமையான சந்தர்ப்பங்களில் சிறுநீரகம், இதயம் அல்லது சுவாச செயலிழப்புக்கு இந்த நோய் வழி வகுக்கும் என்றும் தொற்று நோயியல் பிரிவின் ஆலோசகர் மருத்துவ கலாநிதி துசானி டபரேரா தெரிவித்துள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 300-500 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 190 |
| பச்சைமிளகாய் | 150 | 350 | 150 |
| தக்காளி | 800 | 650 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 120 |
| கோவா | 350 | 350 | 250 |
| கரட் | 480 | 600 | 320 |
| பூசணி | 150 | 170 | 150-180 |
| புடோல் | 300 | 300 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 300 | 300-500 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 800 | 1200 | 700 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 150 |
| பயற்றங்காய் | 300 | 350 | 250-300 |
| லீக்ஸ் | 600 | 700 | 400 |
| பீற்றூட் | 550 | 700 | 300 |
| கறிமிளகாய் | 700 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 250-600 |
| போஞ்சி | 900 | 850 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120-150 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 800-1000 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 80 | 60-100 |
| இராசவள்ளி | 500 | 500 | -- |
| வெங்காயப்பூ | 500 | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 250 | 100 |
| பொன்னாங்காணி | 90 | 150 | 80 |
| வல்லாரை | 40 | 80 | 90 |
| ஈரப்பலா | 150 | 120 | 80 |

# இன்று ஒரு தகவல் 159



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## உடம்புக்கு உதவுங்கள்

இந்த உலகத்திலே தூங்கிக் கெட்டுப் போனவர்களும் உண்டு. தூங்காமல் கெட்டுப் போனவர்களும் உண்டு.முழிச்சிக்கிட்டிருக்க வேண்டிய நேரத்திலே தூங்குவதும் தப்பு. தூங்க வேண்டிய நேரத்திலே முழிச்சிகொண்டு இருக்கிறதும் தப்பு. ஒரு மளிகைக் கடைக்கு பொருட்கள் வாங்கப் போறீங்கள் அங்கே உள்ள பையன், "கொஞ்சம் வெயிட் பண்ணுங்க சார், முதலாளி தூங்கிக் கொண்டிருக்கிறார். முழித்துக் கொண்டதும் உங்களுக்கு வேண்டியதை வாங்கிவிட்டுப் போகலாம்!" என்று சொன்னா வியாபாரம் எப்படி நடக்கும்!

இரவு முழுவதும் தூங்காமல் முழிச்சிக்கிட்டிருந்து விட்டு காலையில புறப்பட்டு... நான் கார் ஓடிக் கொண்டு கன்னியாகுமரிக்குப் போறேன்னு சொன்னா... அவரு என்ன கன்னியாகுமரிக்கா போவார்? வேற எங்கேயாவது போயிடுவார்.அமெரிக்காவிலே நடந்த ஒரு ஆய்வுப்படி சாலை விபத்துக்கள் குறிப்பிட்ட சில நேரத்தில தான் அதிகமாக நடக்குதாம். அதாவது அதிகாலை நேரம் 2 மணியிலேயிருந்து 7 மணி வரைக்கும் பின்பு மதிய வேளை 2 மணியிலே இருந்து 5 மணி வரைக்கும். சில விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள்

மனித உடம்பிலே இந்த நேரங்களிலே நரம்பு மண்டலங்களின் செயற்பாடு கொஞ்சம் குறைவாகவே இருக்குமாம். அதனாலே இந்த சமயங்களிலே எந்த வேலை செஞ்சாலும் கவனக்குறைவு இருக்கும்.. தீர்மானம் எடுக்கிற திறமையும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும்.மேற்கு ஜேர்மனியிலே இரண்டு ஆராய்ச்சியாளர்கள் இதைப் பற்றிய சில விவரம் எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மதிய வேளைகளில் உடம்போட உஷ்ணம் கொஞ்சம்குறையுமாம். அதாவது Basal Metabolic Rate கொஞ்சம் குறைஞ்சுஉடம்பு ஓய்வு எடுக்கறதுக்கு தயாரா இருக்கும். அதனாலே அந்தநேரத்துலே கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கறது நல்லதுதான்.சரி . ஒரு மனுஷன் எவ்வளவு நேரம் தூங்கணும் என்பதற்கும் ஒரு அளவு உண்டு.பிறந்த குழந்தைகள் 18 இல் இருந்து 20 மணி நேரம் தூங்கவேண்டும். பாடசாலை போகும் குழந்தைகள் 12 இல் இருந்து 14 மணி நேரம் வரைக்கும் தூங்கவேண்டும்! பள்ளிக்கூடத்திலே இல்லை. போய் வந்த பின்பு.

பெரியவர்கள் 7 இல் இருந்து 9 மணி நேரம் தூங்கவேண்டும். பொதுவாக யாருக்கு தூக்கம் கெட்டுப் போகிறது தெரியுமா? இந்த, Shift இல் வேலை செய்கிறவர்களுக்குத்தான்! இரவு Shift வேலை செய்து விட்டு காலையில் வீட்டுக்குப் போனவுடனே தூங்க முடியாமல் பையை தூக்கிக் கொண்டு மார்க்கெட்டுக்கு ஓடுகிறவர்கள் எத்தனை பேர்?

நாம் முன்னால் சொன்னது மாதிரி நரம்பு மண்டலம் கொஞ்சம் குறைவா செயற்படும் நேரத்தில் தான் ரொம்பவும் சுறுசுறுப்பா இருக்க வேண்டியிருக்கிறது. என்ன செய்வது? முக்கியமாக வாகன ஓட்டுனர்கள் ரொம்பவும் கவனமாக இருக்கணும். ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிற யோசனைகளை முடிந்த அளவுக்குக் கடைபிடிக்கவேண்டும்.முதலிலே ஒன்று புரிந்து கொள்ளுங்கள். காலை வேளையிலே ஒரு எட்டு மணி நேரம் நீங்க தூங்குவதாக வைத்துக் கொள்ளுங்கள். அது வந்து இரவு எட்டு மணி நேரம் தூங்குவதற்கு சமம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.! Shift Duty காரங்க இன்னொரு விடயத்தையும் கவனிக்கணும். இவங்க Shift வந்து வாரம் பூராவும் ஒரே மாதிரியா இருக்க வேண்டும். அதாவது ஒரு வாரம் முழுவதும் முதல் Shift அடுத்த வாரம் முழுவதும் இரண்டாவது Shift அதுக்கு அடுத்த முழுவதும் மூணாவது Shift. இப்படி ஒரு முறையா வர வேண்டும்.

இன்றைக்கு இரவு வேலைக்கு வந்தேன்.. அப்படியே இருந்து காலை வேலையையும் முடித்து விட்டு போய்விடுகிறேன் என்று சொல்லக்கூடாது. இதுக்கு ஒரு விஞ்ஞான காரணம் இருக்கு. ஒவ்வொரு மனித உடம்புலேயும் ஒரு மெக்கானிசம் இருக்கு Biological Clock. அது இருப்பதனாலே தான் குறிப்பிட்ட நேரத்தில் தூக்கம் வருகிறது குறிப்பிட்டநேரத்திலே முழிப்பு வருகிறது!


Shift-ஐ உங்க இஷ்டப்படி மாத்திக்கிட்டிருந்தா உடம்பு ரொம்ப கஷ்டப்படும். குறைந்தது ஒரு வாரத்துக்காகவது ஒரே மாதிரி Shift இல் இருந்தாதான் உடம்பு அதுக்கு ஈடுகொடுத்து மாத்திக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். Shift கூட முதலிலே காலை பின்பு மதியம் பின்பு இரவு இப்படி வரிசையாக மாறவேண்டும். அதான் நல்லது.ஆக, நேரத்தை கூட நம்ம உடம்புக்கு சௌகரியமான முறையிலே உபயோகப்படுத்திக் கொள்வதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு "Chrono hygiene" என்று பேர் வைத்திருக்கிறார்கள்.

Shift இல் வேலை செய்பவர்கள் கவனத்திலே வைத்துக் கொள்ள வேணும் என்று சொல்லி, விஞ்ஞானிகள் குடுத்திருக்கிற சில குறிப்புகளை சொல்கிறேன். காதிலே போட்டு வைத்துக் கொள்ளுங்கள்! உடம்புக்கு தேவைப்படுகிற அளவுக்கு தூங்கவேணும் ராத்திரியிலே கொழுப்பு சத்துள்ள உணவு சாப்பிடக்கூடாது ஏன் என்றால் அந்த நேரம் ஜீரண சக்தி குறைவாக இருக்கும்.இந்த Chrono-hygiene என்பது முக்கியமாக வாகன ஓட்டுநர்கள் கவனத்திலே வைத்துக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. எவ்வளவோ விபத்துக்களை இது மூலமாக தடுத்துட முடியும். விடியக்காலை நேரத்துலே ஒரு பஸ் வேகமா போய்கிட்டிருந்தது. அந்த பஸ்லே தெய்வீக பிரச்சாரம் செய்கிற ஒரு பெரியவரும் போய்க்கிட்டிருந்தார். திடீர்னு அந்த பஸ் ஒரு ஆத்திலே விழுந்து மூழ்கிப்போய்விட்டது. அந்த பஸ்ஸை ஓட்டியவர் சொர்க்கத்துக்குப் போட்டார். அதுலே போய்க்கிட்டிருந்த பெரியவர் நரகத்துக்குப் போயிட்டார். இது ஏன் என்று யாருக்கும் புரியலே...அந்த பெரியவரே பொறுக்க முடியாமல் கடவுளிடம் முறையிட்டார். "கடவுளே! இது என்ன அநியாயம்! நான் காலம் பூராவும் ஜனங்களுக்கு தெய்வீக பிரச்சாரம் செய்து கொண்டு இருந்தேன். என்னாலேதான் பல பேர் உங்களை நினைக்கிறார்கள். அப்படி இருக்கும் போது என்னை நரகத்துக்கு அனுப்பி அந்த ஆள் தண்ணி போட்டுவிட்டு - கண் முழிச்சி வண்டியை கவிழ்த்துவிட்டார். ஓட்டி விட்டார். அவரை சொர்க்கத்துக்கு அனுப்பிட்டீங்களே!" என்று கேட்டார்.

அதுக்கு கடவுள் பதில் சொன்னார்: "அப்படி இல்லைப்பா... நீ பிரசங்கம் செய்யும் போது எல்லாம் ஜனங்கள் கவலையே இல்லாமல் கண்ணை மூடி தூங்கி கொண்டு இருப்பார்கள். ஆனா அந்த ஆள் வண்டி ஓட்டும் போது எல்லாம் அதில் பிரயாணம் செய்பவர்கள் என்னையே பிரார்த்தனை செய்து கொண்டு இருப்பார்கள்.நல்லவிதமா போய்ச் சேர வேண்டும் என்பதற்காக! உன்னைவிட அவர் தான் ஜனங்களுக்கு அடிக்கடி என் ஞாபகத்தை உண்டாக்கியவர். அதனாலே தான் இப்படி செய்தேன் என்றார் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம்: மன அழுத்தத்தை விரட்டும் உடல் பருமனைத் தவிர்க்கும்



சர்வதேச யோகாதினம் இன்றாகும்.அதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது புகழ்பெற்ற பழமொழி. அந்தப் பழமொழியை நம்மில் பலரும் மறந்துவிட்டோம். நோயற்ற வாழ்க்கையைத் தவிர்த்துவிட்டு. செல்வத்தின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம். அன்றாட வாழ்க்கையில் நம்முடைய ஆரோக்கியத்துக்காக நேரம் ஒதுக்கி உடற்பயிற்சிகள் செய்வதில்லை. விளைவு உடல், மன ஆரோக்கியம் கெட்டு மருத்துவமனைகளை நோக்கிப் படையெடுக்கிறோம்.

இன்று சர்வதேச யோகா தினம். ஒரு நாளில் இருபது நிமிடங்கள் ஒதுக்கி. எளிமையான யோகப் பயிற்சிகளை செய்து வந்தாலே உடலும் உள்ளமும் உறுதியாகும்

நாம் செய்யும் வேலையின் ஒவ்வொரு அசைவுகளுமே ஆசனம்தான். காலை எழுந்ததிலிருந்து இரவு படுக்கப்போகும்வரை செய்கிற ஒவ்வொரு காரியத் திலுமே யோகா ஒளிந்திருக்கிறது. அதை அறிந்து கொண்டு. கொஞ்சம் கவனம் செலுத்தினாலே போதும் முழுமையான பலன்களைப் பெறமுடியும். உதார ணத்துக்கு. நாம் குளிக்கும்போது தண்ணீரை வாளியிலிருந்து எடுக்கக் குனிகிறோம். அது உத்தான பாதாசனம். தண்ணீரைத் தலையில் ஊற்றிக்கொள்ளும் போது அது தாடாசனம்.

பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் யோகா செய்வதற்கு ஏது நேரம் என்று கேட்பவர்கள் கீழே கூறப்பட்டுள்ள ஆறு ஆசனங்களைச் செய்யலாம். இதற்கு ஆகும் நேரம் மிகக் குறைவே. சுமார் இருபது நிமிடம் ஒதுக்கி இதைச் செய்தால் போதும். யோகா செய்யும் இடம் காற்றோட்டமாகவும் இயற்கையான வெளிச்சம் பரவுக்கூடியதாகவும் இருக்க வேன்டும். இறுக்கமான ஆடைகளை ஒதுக்கித். தளர்வான ஆடைகளை அணிந்து செய்ய வேண்டியது அவசியம்.

### தாடாசனம்

நின்ற நிலையிலேயே எளிதாகச் செய்யக்கூடியது தாடாசனம். நேராக நின்றபடி மூச்சை உள்ள இழுத்து. குதிகால்களையும் கைகளையும் ஒருசேர மேலே உயர்த்த வேண்டும். பிறகு மூச்சை விட்டுக்கொண்டே குதிகால்களையும், கைகளையும் கீழிறக்க வேண்டும். ஆசனத்தைச் செய்யும்போது பார்வையைக் குறிப்பிட்ட ஒரு பொருளின்மீது குவிக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது நம்முடைய தண்டுவடம் நன்கு வளையும். இந்த ஆசனம் எந்தவொரு வேலையையும் கவனத்தோடு செய்ய உதவிசெய்யும். உடல் சோர்வடையாது. தண்டுவடப் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கும்.

### வஜ்ராசனம்

குழந்தைகள் இயல்பாக உட்காரக்கூடிய ஆசனம் வஜ்ராசனம். கால்களை நீட்டி இயல்பாக உட்கார்ந்தபிறகு வலது காலை மடக்கி வலது தொடைக்குக் கீழேயும் இடது காலை மடக்கி இடது தொடைக்கு கீழேயும் வைத்து, முதுகை நேராக்கி இரு கைகளையும் கால் முட்டிகள் மீது வைக்க வேண்டும். கண்களை மூடி ஐந்து நிமிடம் மூச்சில் கவனத்தைச் செலுத்த வேண்டும். இதைச் செய்தால் உடல்வலி, மனஅழுத்தம் நீங்கும். அதேபோல அஜீரண கோளாறுகளைச் சரிசெய்யும். இந்த ஆசனத்தைச் சாப்பிட்ட பிறகும்கூட செய்யலாம்.

### மர்ஜரியாசனம்

கால்களை நீட்டி இயல்பாக உட்கார்ந்த பின் வலது காலை மடக்கி வலது தொடைக்குக் கீழேயும் இடது காலை மடக்கி வலது தொடைக்கு கீழேயும் வைக்க வேண்டும். ஒரு அடி துாரத்துக்கு கைகளை முன்புறமாக சற்று தள்ளித்தள்ளி வைத்து (அதாவது குழந்தை தவழுவதுபோன்ற நிலை) மூச்சை இழுத்தவாறே தலையை மேல்நோக்கி உயர்த்த வேண்டும். பின்னர் மூச்சை விட்டபடியே தலையை கீழே தாழ்த்தி தாடையானது கழுத்தில் தொடச்செய்ய வேண்டும். இதைச் செய்யும் மார்பானது விரிவடையும். நெஞ்சுப் பகுதிகளிலுள்ள உறுப்புகள் வலுவடையும். தண்டுவட பிரச்னைகள் ஏற்படாமல் காக்கும்.

### நவ்காசனம்

ஒரு படகு எந்த வடிவத்தில் இருக்குமோ அதுபோன்ற வடிவத்திலிருப்பதே நவ்காசனம். த்ரையில் சௌகரியமாகப் படுக்க வேண்டும். கால்கள் இரண்டையும் சேர்த்து. கைகளை உடலோடு ஒட்டியிருக்குமாறு செய்ய வேண்டும். மூச்சை உள்ளே இழுக்கும்போது கைகளையும் கால்களையும் மேல் நோக்கி உயர்த்த வேண்டும். இப்படிச் செய்யும்போது வயிற்றில் ஓர் அதிர்வு ஏற்படும். இது வயிற்றிலுள்ள தேவையற்ற கொழுப்புகளை நீக்கி, உடலை ஃபிட்டாக வைக்கும். மலச்சிக்கல் ஏற்படாமல் காக்கும். ரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

### உத்தானபாதாசனம்

நேராக நின்று மூச்சை உள்ளே இழுக்கும்போது கைகளை மேல் நோக்கி உயர்த்த வேண்டும். மூச்சை விடும்போது கைகளை முன் பக்கமாகக் கொண்டுவந்து தரையைத் தொட வேண்டும். இது உடல் பருமனைக் குறைக்க உதவுவதோடு உடல் உறுப்புகளில் ரத்த ஓட்டத்தைச் சீராக்கும். மூட்டுகள், தசைகளை உறுதியாக்கும். இந்த ஆசனத்தைச் செய்யும்போது இதனுடன் சேர்த்து மற்றொரு ஆசனத்தையும் செய்வது அவசியம். அது அர்த்தசக்ராசனம்.

### அர்த்தசக்ராசனம்

நேராக நின்று மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். பின்னர் மூச்சை விடும்போது கைகளைப் பின்பக்கமாகக் கொண்டுசென்று இடுப்பில் வைக்க வேண்டும். எந்தளவுக்கு உங்களால் முடியுமோ அந்தளவுக்குச் செய்ய வேண்டும். மேற்கண்ட ஆறு ஆசனங்களையும் தினமும் இருபது நிமிடங்கள் செய்துவந்தால் உடல்நலனும் மனநலனும் மேம்படும்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3148

மாது





நிதுஷா





பார்கவி




சதுர்




கிஷோர்




வசந்த




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 513





அவளுடைய அகம் பாவத்தினால் சோழ நாட்டுச் சிற்றரசர்களையும், பெருந்தர அதிகாரிகளையும் கோபங்கொள்ளச் செய்தாள். தம்பி அருள்மொழிவர்மனை எப்படியாவது இந்தச் சோழ நாட்டுச் சிம்மாசனத்தில் ஏற்றி விடவேண்டும் என்று அவளுக்கு ஆசை. இதனால் சமரசம் ஏற்படாமல் தடுத்து வந்தாள். இப்போது அந்தக் காரணம் போய்விட்டது. இனி மேல் சமரசம் செய்து வைப்பது சுலபம். கேளுங்கள், ஐயா! தாங்கள்தான் சொன்னீர்களே! மந்திரிகளும், மற்றப் பெருந்தர அதிகாரிகளும் சுந்தர சோழருக்குப் பிறகு மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட விரும்புகிறார்கள். சக்கரவர்த்தியும் அதற்கு இணங்கிவிட்டார்.

"அப்படியா, தேவி!" ஆம், ஐயா! இல்லாவிடில் இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டுவரக் கட்டளையிட்டிருப்பாரா? ஆனாலும் அது சரியல்ல என்பது என் கருத்து. சமர சமாகத் தீர்த்துக் கொள்வதற்கு இடம் இருக்கிறது. வெள்ளாற்றுக்கு வடக்கேயுள்ள ராஜ்யத்தை ஆதித்த கரிகாலருக்கு என்றும், தெற்கேயுள்ள பகுதியை மதுராந்தகருக்கு என்றும் பிரித்துக் கொள்ளலாமே? தங்கள் முன்னோர்கள், பல்லவ மகாசக்கரவர்த்திகள் 'தொண்டை மண்டலத்தை ஆள்வதுடன் திருப்தி அடையவில்லையா? பூர்வீகச் சோழ மன்னர்கள் இரண்டு வெள்ளாற்றுக்கும் இடையே உள்ள ராஜ்யத்துடன் திருப்தி அடையவில்லையா?"

"தேவி இதையெல்லாம் எதற்காக என்னிடம் சொல்லுகிறீர்கள் எந்தச் சாம்ராஜ்யம் எப்படிப் போனால் எனக்கு என்ன? யார் எந்த ராஜ்யத்தை ஆண்டால் எனக்கு என்ன?."

ஐயா! தாங்கள் ஆதித்த கரிகாலரிடம் உண்மை விசுவாசம் உள்ள சிநேகிதர் என்று எண்ணினேன்.

"பிறருக்கு விசு வாசமாயிருந்து, பிறருடைய புகழுக்காகப் போராடி, பிற ருடைய நன்மைக்காக உழைத்து, இத்தனை நாளும் கழித்தாகிவிட்டது. இனி மேல் எனக்காக நான் வாழ விரும்புகிறேன். ராணி! இதைக் கேளுங்கள்! நான் எதற்காக இவ்வுலகில் பிறந் தேன். எதற்காக உயிரோ டிருக்கிறேன் என்று பல தடவை நான் சிந்தித்த துண்டு. என் முன்னோர்க ளாகிய பல்லவ சக்கரவர்த் திகள் பெரிய சாம்ராஜ யங்களை ஆண்டார்கள். மாமல்லபுரத்தைப் போன்ற சொப்பன உலகங்களைச் சிருஷ்டித்தார்கள். அவர்களுடைய பெருமையை என் காலத்தில் மீண்டும் நிலை நாட்டப் பிறந்திருக்கிறேனோ என்று நான் எண்ணியதுண்டு. ஆனால் அதில் என் மனம் ஈடுபடவில்லை. ராஜ்யங்களைச் சிருஷ்டிப்பதில் உற்சாகம் கொள்ளவில்லை. சோழ குலத்தின் பெருமைக்கு உழைப்பதிலேயே திருப்தி அடைந்தேன்.

ஆதித்த கரிகாலரின் சிநேகத்தில் மகிழ்ந்தேன். இப்படியே என் வாழ்நாளைக் கழித்துவிடுவது என்றுதான் எண்ணியிருந்தேன். இன்றைக்குத்தான் என் கண்கள் திறந்தன. சற்று முன்னாலே தான் நான் பிறந்தது எதற்காக என்று தெரிந்தது.

அதோ கேளுங்கள்! அந்தக் கடல் அலைகளின் குரல் என் உள்ளத்தின் குரலை 'ஆம் ஆம்' என்று ஆமோதிக் கிறது. அதோ காட்டில் வாழும் பறவைகள் எல் லாம் 'சரி, சரி' என்று கூவுகின்றன. தேவி! சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கு போடுவது பற்றி என் னிடம் சொல்ல வேண்டாம்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## காலத்தின் மதிப்பு



விஜயபுரி என்ற நாட்டை விவேகவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அரசவையில் நன்கு கற்றிருந்த அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர்.

அரசன் ஒரு நாள் அந்த அறிஞர்களை பார்த்து, "அறிஞர் பெருமக்களே வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் எது?" என்று கேட்டான்.

இந்த கேள்வியை கேட்டதும், முதல் அறிஞர், "வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் உயிர்தான். உயிரில்லை என்றால் நம் வாழ்க்கையில் ஒன்றும் அனுபவிக்க முடியாது" என்றான்.

இரண்டாவது அறிஞர், "மன்னா, வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்தது அறிவுதான். அறிவில்லாமல் ஒருவரும் வாழ முடியாது" என்று பதிலளித்தார்.

மூன்றாவது அறிஞர் எழுந்து, "அரசே, வாழ்க்கையில் பொறுமை இன்றி நாம் ஒருகணம் கூட வாழ முடியாது. எனவே மிகவும் விலை உயர்ந்தது பொறுமை தான்" என்று பதில் அளித்தார்.

நான்காவது அறிஞர், "அரசே, நம்ம பூமிக்கு வேண்டிய ஆற்றல் சூரியனிடமிருந்து தான் கிடைக்கிறது. சூரியன் இல்லை என்றால் பூமியில் உயிர்கள் கிடையாது. எனவே சூரியன் தான் உயர்ந்தது" என்றான்.

ஐந்தாவது அறிஞர், "வாழ்க்கையில் அனைத்தும் இருந்து அன்பு இல்லாவிட்டால் மனி தன் வாழ்ந்து ஒரு பயனும் இல்லை. எனவே அன்பு தான் மிக மதிப்பு வாய்ந்தது" என்றார்.

இறுதியாக ஒர் அறிஞர் எழுந்து, "அரசே, காலம் தான் அனைத்தையும் விட மிக மிக மதிப்பு வாய்ந்த பொருள். நமக்கு காலம் இல்லையானால் உயிர் இருந்து என்ன பயன்?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும். - ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலின் அஸ்திரம் எதுவெனில்...

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் இன்னமும் வெளிவராத போதிலும் தேர்தலுக்கான பிரசாரங்களில் தென்பகுதி அரசியல் தரப்புகள் களமிறங்கியுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது உறுதியாயிற்று.

இதில் சஜித் பிரேமதாஸ "பிரபஞ்சம்" என்ற திட்டத்தினூடாகத் தனது தேர்தல் வியூகத்தை முன்னெடுத்து வருகிறார்.

தவிர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓர் உறுதியான தீர்மானத்தை எடுக்க முடியாதவராகத் தத்தளித்தாராயினும் இப்போது தேர்தலில் போட்டியிடுவதென்பதை உறுதி செய்துள்ளார்.

இந்நிலையில் அநுர குமார திஸாநாயக்க வெளிநாடுகளுக்குச் செல்வதிலும் அங்குள்ள இலங்கையர்களைச் சந்திப்பதிலும் தீவிரம் காட்டி வருகிறார்.

இதற்கு மேலாக, இந்தியாவுக்குச் சென்று அரச முக்கியஸ்தர்களைச் சந்தித்திருந்தமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

அநுர குமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணம் தென்பகுதியில் எதிர்ப் பிரசாரமாக முன்னெடுக்கப்பட்டதாயினும் ஒரு மாதிரியாக அதனை ஜே.வி.பி சமாளித்துக் கொண்டது.

இதேவேளை வட மாகாணத்துக்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாஸ; 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுலாக்குவேன் எனக் கூற, அதுவும் தென்பகுதியில் எதிர்ப்பலையைத் தோற்றுவித்தது.

இருந்தும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுலாக்குவதில் என்ன பிழை இருக்கிறது என சஜித் பிரேமதாஸ மறுத்தான் கொடுக்க,

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை தேர்தல் பிரசாரமாக முன்வைக்காதீர்கள் என நாமல் ராஜபக்ஷ தனது தரப்புக்கு ஆலோசனை கூற, நிலைமை ஒருமாதிரியாகத் தணிந்து போனது.

எதுஎவ்வாறாயினும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் இனவாதம் மறைமுகமாக இருக்க, பௌத்தம் என்பதை அஸ்திரமாகப் பயன்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அநுர குமார திஸாநாயக்கவும் திட்டம் தீட்டியுள்ளமை தெரிகிறது.

ஆம், இலங்கை சிங்கள இனவாத நாடு என்ற கருமையை நீக்கவும் அதேநேரம் ஏதோவொரு வகையில் பேரினவாதத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்குமாக, பௌத்தத்தை முன்னிறுத்தி பௌத்தம் தொடர்பில் தமிழர்கள் கதைக்க முடியாது என்பதாக தேர்தல் அஸ்திரம் பிரயோகிக்கப்படும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு

## சபையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த

(கொழும்பு)

பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த பாராளுமன்றில் தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களோடு கடந்த மூன்று மாதங்களில் 2 தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருக்கின்றேன்.

கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களோடு கடந்த மூன்று மாதங்களில் 2 தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருக்கின்றேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் பேசியிருக்கின்றது. ஆசிரியர் குழாமும் பேசியிருக்கின்றது.

இதற்கான பதில் என்னவெனில் இங்கு இரண்டு விதமான பிரச்சினைகள் இருக்கின்றன. 2018ம் ஆண்டில் அந்த சந்தர்ப்பத்தில் கல்விசாரா ஊழியர்களுக்கு 92 சதவீத அதிகரிப்பும் கல்விசார் ஊழியர்களுக்கும் 107 சதவீத அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இவற்றுக்கிடையில் உள்ள 15 சதவீத அதிகரிப்பை பெற்றுக்கொள்வதே கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கை.

இது தொடர்பில் இரு தடவை திறைசேரியோடும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோடும் கலந்துரையாடியிருக்கின்றோம்.

எதிர்வரும்வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான நிதியை ஒதுக்கி, இந்த ஏற்றத்தாழ்வில் சிக்கல்கள் வராதபடி தீர்வு வழங்க வேண்டும் என்ற முடிவிற்கு நாங்கள் வந்தோம் என்றார். (ம-7,10)

## கடன் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு தயார் - பந்துல

இரு தரப்பு கடன்கள் தொடர்பான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்தானவுடன், இடைநிறுத்தப்பட்டுள்ள கடன் அடிப்படையிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கையானது பரிஸ் க்ளப், இந்தியா, சீனா ஆகியத் தரப்புகளுடன் இரு தரப்பு கடன்களைக் கொண்டுள்ளது.

இந்தக் கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்திருப்பதாகவும், அது சார்ந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திடத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ம-7,10)

## நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு போதைப்பொருட்களுடன் 714 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருட்களுடன் 13 பெண்களும் 701 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 21 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நிலையில், போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 11 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10)

## போதைப்பொருளுடன் இரண்டு தேரர்கள் கைது

(கம்பஹா)

கம்பஹா ரயில் நிலையத்தில் பொது மலசலக் கூடத்திற்கு அருகில்போதைப் பொருளுடன் இரண்டு தேரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணேமுல்ல பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றில் வசிக்கும் 20 மற்றும் 25 வயதுடைய இரண்டு தேரர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் கொழும்பு பிரதேசத்தில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் கல்வி கற்று வருவதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களின் பயணப் பொதிகளிலிருந்து 220 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை கம்பஹா நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

## ஆட்டோ மோதியதில் பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

கஹதுடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஹதுடுவ - ஜம்புகஸ்முல்ல வீதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம்இடம்பெற்றுள்ளது.

கஹதுடுவயிலிருந்து ஜம்புகஸ்முல்ல நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று அதே திசையில் பயணித்த மற்றுமொரு முச்சக்கரவண்டியை முன் நோக்கிச் செல்ல முயன்ற போது வீதியில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த வயோதிபப் பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கஹதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் ஹோமாகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

## கடலில் மீனவர்கள் இடையே மோதல்

### ஒருவர் உயிரிழப்பு

பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்கு சென்ற சஹான் புத்தா என்ற நெடுநாள் மீன்பிடி படகில் ஏற்பட்ட முறுகல் நிலையால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆறு மீனவர்களுக்கு இடையே நடுக்கடலில் இடம்பெற்ற மோதலில், படகில் இருந்த ஏனையவர்களும் காயமடைந்துள்ளதாக பேருவளை கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேருவளை சுங்க வீதியில் வசிக்கும் சுமணசிறி பெர்னாண்டோ என்ற படகின் உரிமையாளரால் இந்த சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவரின் சடலம் பேருவுளை மீன்பிடி துறைமுகத்திலிருந்து சுமார் 180 கடல் மைல் தொலைவில் இருந்து அதே படகில் பேருவளை மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் றொக்லண்ட் வத்தையை சேர்ந்த எம்.கே.சந்தன உபுல் என்ற நபரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தெங்குத் தொழிற்துறையிலேயே உள்நாட்டு மூலதனம் ஆரம்பத்தில் குவியத் தொடங்கியது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் தொடக்கம், இந்நாட்டு மக்களிற் பணம் படைத்தவர்கள் தென்னந் தோட்டத் துறையில் அதிகமாகப் பங்கு பற்றத் தொடங்கினர். இலங்கையின் தெங்குத் தொழில் முழுமையும் இந்நாட்டினரின் கையில்தான் தங்கியிருந்தது எனக் கூறின் மிகையாகாது.

தென்னைப் பயிர் அபிவிருத்தித் துறையில், சுதேசிகள் பல கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இந்நாட்டு வங்கித் தொழில் முழுமையும் ஐரோப்பியர் கைகளிலிருந்தமையினால் சுதேச முதலாளிகள் ஐரோப்பிய முதலாளிகளிலும் பார்க்கப் பல இன்னல்களுக்கு ஆளானர்கள். வட்டிக்குக் கடன் கொடுக்கும் செட்டிமார்களே இந்நாட்டவர் கடன் பெறுவதற்கு ஒரேயொரு மார்க்கமாக அமைந்தனர். இவர்கள் தானும் குறுகிய கால வர்த்தக மூலதனப் பணம் கொடுக்க முன்வந்தனரேயன்றி, நிலத்தில் முதலீடு செய்வதற்கு நீண்ட காலக் கடன் கொடுக்க விரும்பவில்லை.

1870 தொடக்கம் தென்னைப் பிரயோசன உற்பத்தி, ஏற்றுமதி வர்த்தகத்தில், விசேஷமாக எண்ணெயும் கொப்பராவும் முக்கியமான இடம் பெறத் தொடங்கின. இவற்றின் ஏற்றுமதி 1870 இல் 4.5 வீதத்திலிருந்து, 1880 இல் 9 வீதமாகவும், 1890 இல் 15 வீதமாகவும், 1900 இல் 17 வீதமாகவும், 1910 இல் 24.5 வீதமாகவும் அதிகரித்தது.

இதற்கொப்ப தென்னை பயிரிடப்பட்ட நிலத்தின் விஸ்தீரணமும் 1860 இல் 2 இலட்சம் ஏக்கரிலிருந்து 1900இல் ஆறு இலட்சமாகவும், 1910 இல் எட்டு இலட்சமாகவும் உயர்ந்தது. இவற்றுள் 10 வீதம் மாத்திரமே பெருந் தோட்ட முதலாளிகளின் கைகளிலிருந்தன. மிகுதித் தோட்டங்கள் சுதேசிகளின் கைகளிலிருந்தன.

முதலாம் உலகப் போர்க் காலத்தில் தெங்குப் பொருள் ஏற்றுமதி, கப்பற் போக்குவரத்துக் குறைவால் அதிகம் பாதிக்கப்பட்டது. இதன் பிரதான நுகர்வு நாடு பிரித்தானியாவாக இருந்தமையினால், போக்குவரத்து குறைய, நுகர்வும் குறைந்தது. 1914-18 ஆண்டுகளில் விலை வீழ்ச்சி 50 வீதம் எனக் கணக்கிடப்பட்டது. 1913 இல் 20.7 வீதத்திலிருந்து, 1917 இல் 10.6 வீதமாக தெங்கு ஏற்றுமதியின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது.

இந்நிலையில் சிறு தோட்டக்காரர் இறப்பர் உற்பத்திக்கு மாறினர். போரின் பின்னர் போக்குவரத்துச் சுலபமாகியதால் தெங்குப் பொருட்களின் கேள்வி திடீரென அதிகரித்தது. விலைகளும் அதி விரைவாக உயர்ந்தன.

இக்கேள்வியை சுதேச உற்பத்தியாளர் உடனடியாகச் சாதிக்க முடியாமற் போனதால், உயர் விலைகள் 1922 வரை நிலைத்திருந்தன. 1922-30 வரை ஏற்பட்ட மந்த நிலைக் காலத்தில் தெங்கின் விலை, தேயிலை இறப்பர் விலையிலும் கூடுதலான உறுதி பெற்று விளங்கியது.

### 1850 தொடக்கம் 1903 வரை இலங்கையினை ஆட்சி செய்த ஆள்பதிகள்

**ஆள்பதி சேர். ஜோஜ் அன்டர்சன் (1850-55)**

சேர். ஜோஜ் அன்டர்சன் (1850-55) காலத்தில் கோப்பிச் செய்கையும் வர்த்தகமும் அதிகரித்து விரைவில் பழைய நிலையை அடைந்தது. 1848 ஆம் ஆண்டுக் கலகத்திற் சிறையானோர் 1854 இல் விடுதலை செய்யப்பட்டனர். அதே ஆண்டு தோட்டத் துரைமார் தமக்கனெ ஒரு சங்கத்தைத் தாபித்தனர். அவர் கையாண்ட சிக்கனத்தினால் பின் வந்த ஆள்பதி பெரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடிந்தது.

**ஆள்பதி சேர். ஹென்றி உவாட் (1855-60)**

"அதிஷ்ட ஆள்பதி" எனப் பெயர் பெற்றவர், ஏனெனில் அவர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும், குடியானவரின் நல்வாழ்வுக்குமென வகுத்த திட்டங்கள் நற்பயனை அளித்தன, அவர் ஆள்ப தியாகப் பதவியேற்றுச் செய்த முதற் கருமங்களிலொன்று, நாட்டின் இறை வருமானத்தின் ஒரு பகுதியைத் தெருக்களினதும், நீர்ப்பாசன வேலைகளினதும் விருத்திக்கு ஒதுக்கியமையாகும்.

அவரது ஆட்சி முடிவடையுமுன் இலங்கை எங்கும் நல்ல தெருக்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன், முக்கிய நகரங்கள் யாவும் கொழும்புடன் இணைக்கப்பட்டன. அவர் நாட்டின் பல பாகங்களில் குளங்களைத் திருத்தவும் புதுப்பிக்கவும் பெரு முயற்சி செய்தார்.

1856 இல் இரண்டு பணமாயிருந்த தபால் முத்திரைச் செலவை ஒரு பெனி ஆக்கினர். 1857 இல் கொழும்புக்கும் காலிக்குமிடையில் தந்திச் சேவையை ஆரம்பித்தார். 1858 இல் உவாட், தன் கையினால் முதற் பொளி வெட்டிக் கொழும்பு-கண்டி புகையிரத வீதி அமைக்கும் வேலையைத் தொடக்கி வைத்தார்.

1859 இல் கன்சபாவைச் சட்டத்தை இயற்று வித்தார். நாட்டு மக்கள் அவரை எத்தனை அளவு மதித்து நேசித்தனர் என்பது, அவரது பதவிக் காலத்தை நீடிக்கும் படியும், அவரது வேதனத்தை உயர்த்தும் படியும், அவர்கள் விக்ரோறியா மகா ராணிக்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்திலிருந்தும் கண்டி மக்கள் அவரது ஞாபகத்துக்காகத் தம் நகரில் தம் செலவில் இயற்றிய சிலையயில் இருந்தும் புலப்படும்.

**ஆள்பதி சேர் சாள்ஸ் மக்காத்தி (1860-63)**

சேர் சாள்ஸ் மக்காத்தி (1860-63) கொழும்பு-கண்டிப் புகையிரத வீதி அமைப்பு ஒப்பந்தத்தை W. R. பவியேல் இடம் ஒப்படைத்து, அவ்வேலை துரிதமாக நடைபெறுவதற்கு வழி வகுத்தார். அவரது காலத்தில் "லங்கா லோக்கய" எனும் முதற் சிங்களப் பத்திரிகை பிரசுரமானது. சுகவீனத்தின் காரணமாகப் பதவியைத் துறந்தார்.

**ஆள்பதி மேஜர் ஜெனரல் ஓ பிறயன் (1863-65)**

மேஜர் ஜெனரல் ஓ பிறயன் (1863-65) நிரந்தர ஆள்பதி ஒருவர் நியமிக்கப்படும் வரை தற்காலிக ஆள்பதியாகச் சேவை செய்தார். 1864 இல் சட்டக் கழகத்தில் இராணுவச் செலவினங்களைப் பற்றி ஏற்பட்ட கிளர்ச்சியையும், அதன் பயனாக உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் யாவரும் ஒரே முகமாக இராஜினமா செய்த பிரச்சினையையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. 1864 இல் கொழும்பு-அம்பேபுஸ்ஸ புகையிரத வீதி முற்றுப்பெற்றது.

**சேர். ஹேர்க்கியூலிஸ் றொபின்சன் (1865-72)**

சேர். ஹேர்க்கியூலிஸ் றொபின்சன் (1865-72) இலங்கையை வந்தடைந்த ஆண்டில் கொழும்பு, கண்டி எனும் இடங்களிலும் 1866 இல் காலியிலும் மாநகரசபைகளை நிறுவினர். 1867 இல், அவர் கொழும்பு கண்டிப் புகையிரத வீதியைப் போக்குவரத்துக்குத் திறந்து வைத்தார்.

1869 இல் கல்விச் சங்கம் நிராகரிக்கப்பட்டு, பாடசாலைகள் வித்தியா பகுதியினரின் பொறுப்பில் விடப்பட்டன. 1870 இல் கொழும்பில் வைத்தியக் கல்லூரி நிறுவப்பட்டது. கன்சபாவைச் சட்டம் இயற்றப்பட்டது.

1871 இல் இலங்கையின் முதற் குடிசன மதிப்பு நடாத்தப்பட்ட பொழுது, அதன் குடிசனம் 2,405,287 என மதிப்பிடப்பட்டது.

1872 இல் ரூபா, சத நாணய முறை வழக்கத்துக்கு வந்தது. அவர் ஏட்டுப் பிரதிகளிற் கிடந்த பாளி மொழி நூல்களைத் திரட்டும்படி திரு. ஜேம்ஸ் டி அல்விஸ் என்பவரைப் பணித்தார்.

**சேர். வில்லியம் கிறகரி (1872-77)**

சேர். வில்லியம் கிறகரி (1872-77) இன் காலத்தில் கோப்பித் தோட்டங்களின் செல்வ நிலையினால் அரசாங்க வருமானம் அதிகரித்து வரலாயிற்று. 1872 இல் கொழும்பு நகரம் வாயுத் தீபம் மூலம் முதன் முதல் ஒளி ஏற்றப்படலாயிற்று. அவ்வாண்டில் கம்பளைக்குப் புகையிரதவீதி முற்றுப் பெற்றது.

1873 இல் வடமத்திய மாகாணத்தைப் புதிதாக ஆக்கினார். 1874 இல் புகையிரதப் பாதை நாவலப்பிட்டிக்குத் திறக்கப்பட்டது. 1875 இல் உவேல்ஸ் கோமகன் (பின்பு ஏழாம் எட்வேட் அரசர்) இலங்கை கண்டிச் சபா மண்டபத்தில் கிறகரி ஆள்பதிக்கு சேர்' பட்டமளித்தார்.

அவர் கொழும்புக் கடலணைக்கு அத்திவாரமிட்டார். பாணந்துறை வரை புகையிரத வீதியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். 1875 இல் கொழும்பு நூதனசாலை திறக்கப்பட்டது.

**சேர். ஜேம்ஸ் றொபேட் லோங்டன் (1877-83)**

சேர். ஜேம்ஸ் றொபேட் லோங்டன் (1877-83) இன் முயற்சியினால் (1881) கொழும்புத் துறைமுக அணை கட்டப் பெற்றது. அவரது காலத்தில் கோப்பித் தோட்டங்களில் நோய் பரவி அழிந்து போகவே பொருளாதார நெருக்கடி மிகுந்தது.

**சேர். ஆத்தர் கோடன் (1883-90)**

சேர். ஆத்தர் கோடன் (1883-90) ஒறியன்ரல் வங்கி 1884 இல் முறிந்தபொழுது, மிகவும் திறமையுடன் நிலைமையைச் சமாளித்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவில்...

அருள்ராஜ் (வயது-23) என்ற இளைஞனே கொலை செய்யப்பட்டவராவார்.

இருவருக்கிடையே காணப்பட்ட முற்பகை காரணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வாய்த்தர்க்கம் இடம்பெற்றதாகவும் அதன் பின்னர் குறித்த கொலை இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக நெடுந்தீவு வைத்தியசாலையில், ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொலையுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10,33)

## மனைவியை...

ரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார் கணவனை கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, 2019ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகள் முடிவடைந்த நிலையில்,படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனை நீதிமன்றம் குற்றவாளியாக தீர்ப்பளித்து, மரண தண்டனை விதிக்கப்பட்டது. (ம-7,10)

## அகழ்வாராய்ச்சிப்...

பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் அவர்களின் ஒழுங்கமைப்பில் பெருங்கற் காலப் பண்பாட்டை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக் கூடிய வகையிலான சான்றுகள் கிடைக்கப்பெறும் என நம்பப்படும் ஆனைக்கோட்டையில், அகழ்வாராய்ச்சிப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்லியல் பணிமனை அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உறுப்பினர்கள்முன்னாள் வலி.தென் மேற்கு தவிசாளர் ஆகியோர் உட்பட பலர் இந்த ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (ம-7,10,33)

## ஜனாதிபதித்...

நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவே இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் 2019 ஆம் ஆண்டு நடைபெற்றதால் இந்த ஆண்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலை நடத்துவதற்கான சட்டவியலுமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளது.

இதன்படி செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கும் இடையில் தேர்தல் நடத்தப்படலாம்.

அந்தக் காலப்பகுதிக்கு அமைவாகத் திகதி ஒன்று நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (ம-7,10)

## முல்லை...

யாத்திரையை ஆரம்பித்த பிக்குகள் குழு நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தை அடைந்து குருந்தூர்மலை செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது. இந்த பயண வழிகள் எங்கும் பொலிஸ் பாதுகாப்பு இடப்பட்டுள்ளது.

குறிப்பாக அளம்பில் சந்தியை அண்டிய பகுதியில் விசேட அதிரடிப் படையினர் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருப்பதுடன் வீதி தடுப்புக்கள் அப்பகுதியில் வைத்துள்ளனர்.

பொலிஸாரின் பாதுகாப்புடன் தென் பகுதி மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்த பௌத்த மக்கள் பௌத்த கொடியை வீதியில் இரு பகுதிகளிலும் நாட்டி கூடாரங்களையும் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## 13ஆம்...

டிற்குப் பின்னர் நாட்டை ஆட்சி செய்த 3 ஜனாதிபதிகளும், 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்ட விடயத்தை ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ஆனால் அதில் எவ்வித நன்மைகளும் தமிழ்மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை என்பதனை என்சார்பாக எடுத்துரைத்தேன்.

13ஆம் திருத்தச்சட்டத்தில், உள்ள அதிகமான அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. அதன்காரணமாக வெற்றுக் கடதாசி போலுள்ள ஒரு சட்டத்தை மக்களுக்கு வழங்குவதில் எவ்வித பயனும் இல்லை" என்றார். (ம-7,10)

## இலங்கை...

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு, சம்பிரதாயபூர்வமான சந்திப்பாகவே அமைந்திருந்தது

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று மாலை 5 மணி தொடக்கம் 5.30 மணி வரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், செல்வராசா கஜேந்திரன், இராசபுத்திரன் சாணக்கியன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், கலந்து கொண்ட தமிழ்த் தரப்பினர் அனைவரும், மீண்டும் பதவியேற்ற ஜெய்சங்கருக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையெடுக்க கோரிக்கை விடுத்தனர். செல்வராசா கஜேந்திரன் தவிர்ந்த அனைவரும், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென கோரினர்.

செ.கஜேந்திரன், தமது கட்சி 13வது திருத்தத்தை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டதுடன், தமது கட்சியின் நிலைப்பாடு அடங்கிய ஆவணமொன்றையும் வழங்கினார்.

தாங்கள் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக சி.சிறீதரனும், சி.வி.விக்னேஸ்வரனும் குறிப்பிட்டனர். சிறீதரன் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக குறிப்பிட்ட உடனே, பொது வேட்பாளரை எதிர்ப்பதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'பொதுவேட்பாளர் விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் ஆர்வமாக இருக்கிறீர்களா? என ஜெய்சங்கர் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அனைவரும் கருத்து தெரிவித்த பின்னர், ஜெய்சங்கர் கருத்து தெரிவித்தார். தமிழ் மக்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தாம் தொடர்ந்து இலங்கை அரசுடன் பேசி வருவதாகவும், தொடர்ந்தும் பேசுவதாகவும் குறிப்பிட்டார். (ம-7,10)

## சந்திப்பில்...

காரணமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடனான சந்திப்பில் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று மாலை 5 மணியளவில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அக்கட்சிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேற்படிச் சந்திப்பில் இரா.சம்பந்தன் திடீர் சுகவீனம் காரணமாக கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.06.20
சீட்டிழுப்பு இலக்கம் 5510
B 1 5 9 0 6 5
அத சம்பத B 9 0 6 5
சீட்டிழுப்பு இலக்கம் 085

தன நிதானய
திகதி -2024.06.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1540
U 04 10 50 71 U
77128

மெகா பவர்
திகதி 20/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1858
T 05 25 41 70 71
27008

லக்கி 7 VIP
திகதி 2024.06.20
சீட்டிழுப்பு இலக்கம் 0336
U 9 1 3 2 2 8 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3752
சீட்டிழுப்பு திகதி 20.06.2024
J 10 11 58 70
J 24385

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.20
சீட்டிழுப்பு இலக்கம் 0819
மிதுனம் 01 15 16 53 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.06.2024 வெற்றி வாரம் 218 வர்ணம் பச்சை
Q 3 7 3 6 7 2
ரூ.20,068,308.00
53821

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2484 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 20.06.2024 தினம் புதன்கிழமை
08 42 71 75 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,508,999.20

சனிதா
திகதி 2024.06.20 வெற்றி வாரம் 4645 வர்ணம் சிவப்பு
17 24 31 34 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,298,296.00
60409

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4196 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.20 தினம் வியாழக்கிழமை
04 12 16 23 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,413,325.60
464593

கப்ருக
E 14 17 19 41 61
சீட்டிழுப்பு வாரம் 1660
இள நீலம்
20.06.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 528,808,927.80

அத கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2310
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.121,734,499.20
11 40 43 67 F
739250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**Vacancies**

Telephone Operator, office Admin, Accounts clerk, Manager, Receptionist, Data Entry Operator, Cash Collector, IT Executive, Management Trainee, Supervisor

(1275)

**076 098 4532, 074 083 3368**


## மகிந்த - ஜெய்சங்கர் சந்திப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை, இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்று சந்தித்தார்.

அவரை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைவதாக ஜெய்சங்கர் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியா இலங்கை இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் தற்போதைய முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அவரது தொடர்ச்சியான ஆதரவுக்காக எமது பாராட்டுகள்" என்றும் ஜெய்சங்கர் தமது பதிவில் கூறியுள்ளார். (ம-7,10)

## எரிசக்தித்துறை...

கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடலில் இந்த விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

எரிசக்தி இணைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மேம்பாடு, எல்.என்.ஜி விநியோகம், இரு நாடுகளுக்கு இடையே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எரிபொருள் விநியோகக் குழாய், எரிபொருள், எரிவாயு ஆய்வுத் திட்டங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பால் உற்பத்தியை ஊக்குவிக்க, இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் செயல்திறன் மற்றும் உர உற்பத்தி தொடர்பான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

திருகோணமலையின் அபிவிருத்திக்காகவும், காங்கேசன்துறை துறைமுகத்தின் விரிவாக்கத்திற்காகவும் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ம-7,10)


**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 17 37 684**

(1269)

அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

(C-0653)

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0652)

**Show Money**

**1%**

லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான
வங்கி இருப்பு/ விசா சேவை

T.P : 075 033 6759

(1263)

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)


CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-0652)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322


# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 06 . 1938



மறைவு 17 . 06 . 2024

## சின்னத்தம்பி இராஜதுரை

யாழ்ப்பாணம், கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராஜதுரை அவர்கள் கடந்த 17.06.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மா அவர்களின் பாசமிகு கணவரும் செல்வரட்ணம், விஜயலட்சுமி மற்றும் காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரதிராஜா, இராஜவரோதயம் (பாபு), காலஞ்சென்ற செல்வராணி (ரஞ்சி), கருணாவதி, ராதா (பிரான்ஸ்), பிரபாகரன் (கனடா), றொபின்ராசா (யோத்தா), அஞ்சனா, ரமேஸ்குமார் (ரஜினி - பிரான்ஸ்), காலஞ்சென்ற ரகு மற்றும் ரஞ்சித்குமார் (வசந்தன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உஷாந்தினி, ஈஸ்வரி, பாலசுந்தரம் (அமரர்), சிவராஜா, செல்வரஞ்சனி, நிர்மலா, றதீஸ்குமார் மற்றும் செல்வி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அமரர் இராசேந்திரம், அமரர் பூமணி, இராசமணி(கனடா), சின்னராசா, நாகராசா(பிரான்ஸ்), ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் நிருசாந், அனித்தா, நிவேகா, அனுசாந், தனுசாந், சிநேக்கா, சினுகா, சிவேக்கா, இந்திகா, இந்தியன், டார்வின், டிலக்ஷனா, டிலானி, அபிநயா, விபுஸ்கான், சாய்வர்ஷிதா, சரணியன், லதுசன், கன்சியா, மிதுசன், வலன்டினா, வர்ஷயா, றயன், விதுர்ஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(1278, 1281)

இல.5, 5th ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.இல: 077948[illegible]


முருகன் துணை



**அருணகிரிநாதர் குரு பூசைதினம்**

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி தொண்டைமானாறு
காலம் : 22.06.2024 சனிக்கிழமை காலை 9.00 மணி

பஞ்சபுராணம் ஓதுதல் : அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சுழிபுரம்
தொடக்கவுரை : இ.வாகீசன்(ஆசிரியர்)
கலை நிகழ்வுகள் : மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய ஞானஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்கள்
நடனம் : செல்வி ஆருத்திரா ஜெயமோகன் (யாழ்ப்பாணக் கல்லூரி)
சொற் பொழிவு : செல்வன் ப.பிரவீனன் (இந்து வாலிபர் சங்கம் - வட்டுக்கோட்டை)
திருப்புகழிசை : திருமதி சித்திரா ஹவிக்குமார் (இசைத்துறை நுண்கலை மாணி) பக்கவாத்திய சகிதம்
சொற்பொழிவு : 'அருணகிரியான்' இசைப்பேராசான் கலாநிதி நா.வி.மு. நவரத்தினம் (முன்னாள் இசைத்துறை தலைவர், யாழ் பல்கலைக்கழகம்)
நன்றியுரை : திருமதி சசிலேகா ஜெயராஜா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவை

(C-0622)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.